மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 150, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

150—

ஊரகத் தொழில்துறை நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு.

***10856** —திரு. தி. சாத்தையா:*

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரகத் தொழில் துறையில் உள்ள நிறுவனங்களில் (State Government Undertakings) 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோருக்கும் 1 சதவீதம் பழங்குடியினருக்கும் உள்ள இட ஒதுக்கீடு தரப்பட்டு விட்டதா?

(ஆ) இது குறித்து அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சிறுதொழில் நிறுவனத்தில் 17 சதவீதம், மற்ற நிறுவனங்களில் 19 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கிட்டத்தட்ட நமது தமிழக அரசு State Government Undertaking Companies 40-க்கும் மேற்பட்டு இருந்தும், இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவீதம் எஸ்.சி.-க்கு, 1 சதவீதம் எஸ்.டி.-க்கு சில நிறுவனங்களில் நிரப்படாமலேயே உள்ளது. அந்த நிரப்படாமல் உள்ள backlog in employment-ஐ பூர்த்தி செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரு குழு போன்ற அமைப்பை ஏற்படுத்தி அந்த backlog எல்லாவற்றையும் இந்த தமிழ்நாடு State Government Undertaking Companies-ல் fill-up பண்ணுவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தில் பணியாளர்கள் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாக உள்ளதால் அரசு வேண்டுகோளுக்கிணங்க, தன் விருப்பு பணி ஒய்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதுவரை 258 பணியாளர்கள் தன் விருப்பு பணி ஒய்வுத் திட்டத்தின் கீழ் அப்படி அனுப்பப்பட்டுள்ளனர். இன்னும் அதிகப்படியாக உள்ள பணியாளர்கள் குறைக்கப்பட உள்ளனர். எனவே, இந்த நிறுவனத்தில் புதிய நியமனங்கள் செய்யும் சாத்தியக்கூறு தற்சமயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்பது, இந்த 18 சதவீதம் நியமிக்க முடியாமல் சில நிறுவனங்களில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கலைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது, புதிய நியமனம் பற்றி அவர் கேட்கவில்லை.

முற்பகல் 10.50

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற நிறுவனங்களில் ஏற்கெனவே 18 சதவீதம் என்ற அளவில் நாம் நிரப்பி இருக்கிறோம். என்னுடைய இலாக்காவைப் பொறுத்தவரையில் இந்த ஒரு நிறுவனத்தில்தான் அதைச் செய்ய இயலவில்லை. மற்றவைகள் சரியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி .சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் கூறினார்கள். 17 சதவீதம் வரை எஸ்.சி.க்கு பில் அப் ஆகி இருக்கிறது. இன்னும் ஒரு பெர்சன்ட்தான்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அந்த ஒரு நிறுவனத்தில் மட்டும்தான் என்று சொன்னார்கள்.

திரு. தி. சாத்தையா: எல்லா நிறுவனங்களிலும் பேக்லாக்ஸ் எல்லாம் பில் அப் பண்ணி அதாவது ஒரு குழு போன்ற அமைப்பை ஏற்படுத்தி இதைக் கண்காணிப்பதற்கும், இந்த 18 சதவீதம் எஸ்.சி-க்கு, ஒரு சதவீதம் எஸ். டி.க்கு என்பதை முழுவதாக புரட்சித் தலைவியின் அரசின் காலத்திலேயே நிரப்புவதற்கும் ஏற்பாடு செய்து ஒரு டேட் பிக்ஸ் பண்ணி அதாவது 1994 டிசம்பருக்குள் இந்த பேக்லாக் எல்லாம் பில் அப் பண்ணப்படும் என்ற வகையில் டேட் பிக்ஸ் பண்ண அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். அதோடு இப்போது இருக்கும் சூழ்நிலையில் ஒவ்வொரு சமுதாயத்திற்கும், அதாவது பி.சி.க்கு 30 சதவீதம், எஸ்.சி.க்கும் எஸ். டி.க்கும் 19 சதவீதம், எம்.பி.சி. எனப்படும் மிகவும் பிற்பட்டவர்களுக்கு 20 சதவீதம் என்றும் ஒதுக்கியத்தைப் பொறுத்த வரையில் ஜனத்தொகைக்கு ஏற்ப ப்ரப்போர்ஷனேட்- ஆக அந்த விகிதாச்சாரத்தை அமைந்திருந்தால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களும் முன்னேறுவதற்கு அதிகப்படியான வாய்ப்பு ஏற்படும். எனவே அந்த வகையில் அதிகப்படியான பெர்சன்டேஜ் ஒதுக்கி வாழ்க்கையில் தாழ்த்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டுள்ள, எக்கனாமிக்கலாக பின்தங்கியுள்ள மக்கள் முன்னேறுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே அவர்களுக்குச் சொன்னேன். டான்சி நிறுவனம் ஒன்றில்தான் அந்த 17 சதவீதம்

இருக்கிறது. அங்கே ஏற்கெனவே ரிட்ரென்ஜ்மென்ட் என்ற அடிப்படையில் அவர்களை பணி ஓய்வு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்ற காரணத்தால் அதிக அளவில் அங்கே பணியாளர்கள் இருக்கின்ற காரணத்தால் அதை மறுபரிசீலனை செய்ய இயலாது. மேலும் நாம் புதிதாக நியமனம் செய்யப்போவதில்லை. மற்ற நிறுவனங்களில் 18 ப்ளஸ் 1 என்ற அந்த 19 சதவீதம் ஏற்கெனவே நிரப்பி இருக்கிறோம். எனவே எல்லா நிறுவனங்களிலும் ஏற்கெனவே இருக்கிற முறைப்படி அவர்களுக்குள்ள உரிமைகளைப் பாதுகாக்க இந்த அரசு என்றும் தவறியதே இல்லை. ஆகவே ஒரு குழு அமைக்கவேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 151, திரு. வி.ரவிச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

151—

உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைக் கல்வியை பாடத் திட்டமாக்குதல்.

** 25449* - திரு வி. ரவிச்சந்திரன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைக் கல்வியை பாடத் திட்டத்தில் சேர்க்க பரிந்துரை செய்ய அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வேளாண்மை கல்வியை பாடத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து அமைக்கப்பட்ட குழு இடைக்கால அறிக்கை கொடுத்துள்ளது. இறுதி அறிக்கை பெறப்பட்டபின், உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைக் கல்வியை பாடத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஆம் என்றதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உயர்நிலைப்பள்ளிகளில் வேளாண்மைக் கல்வி பாடத்திட்டத்தில் எந்தக் கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.